Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 8 (8-5-66) இதழ் 90

பராபவ சித்திரை 25 பிறை முஹர்ரம் 16 ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி, கொழும்பு

### சுபந்திரியோ தற்கொலை முயற்சி?

ஜாகர்த்தா, மே. 7

முன்னாள் இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ தற்கொலை புரிய முயன்றார் என்றும், இம்முயற்சி தோல்வியுற்றது என்றும் அறிவிக்கப்படுகிறது.

# தெல்லிப்பழையில் நவீன ஆஸ்பத்திரி

## காங்கேசனுக்குப் பதில் புதிதாக நிறுவ ஏற்பாடு

கொழும்பு, சனி

தெல்லிப்பழையில் நவீன ஆஸ்பத்திரி ஒன்றை நிறுவ சுகாதார அமைச்சு திட்டமிட்டிருக்கிறது. தற்போது காங்கேசன்துறையிலுள்ள ஆஸ்பத்திரிக்குப் பதிலாக, புதிய ஆஸ்பத்திரி நிறுவப்படும்.

நவீன வசதிகள் நிறைந்த மற்றும் பல ஆஸ்பத்திரிகள் நாட்டின் இதர பகுதிகளிலும் நிறுவப்படவிருக்கின்றன.

மஸ்கெலிய ஓயாவில் தற்போதைய நீர்மின்சாரத் திட்டம் பூர்த்தியானதும் அங்கு 36 லட்சம் ரூபாய் செலவில் ஒரு ஆஸ்பத்திரி நிறுவப்படும். தற்போதைய ஆஸ்பத்திரி, திட்ட விஸ்தரிப்புக் காரணமாக அழிக்கப்படவிருக்கிறது. இதே போல் மகியங்கனையில் ரூ. 15 லட்சம் செலவில் புதிய ஆஸ்பத்திரி ஒன்று நிறுவப்படவிருக்கிறது.

## கனடாவின் புதிய மீன்பிடி வள்ளம்

### கூட்டுறவு சங்கத்திற்கு அன்பளிப்பு

பருத்தித்துறை, சனி

1964-ம் ஆண்டு டிசம்பரில் சூறாவளியால் அழிந்த மீன்பிடித் தொழிலுக்கு புத்துயிரளிக்குமுகமாக இலங்கை பட்டினிஒழிப்பு ஸ்தாபனத்துக்கூடாக பருத்தித்துறை சுப்பர்மடம் சித்தி விநாயகர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கனடிய அரசாங்க நன்கொடையாக ரூபா 22 ஆயிரம் பெறுமானமுடைய இயந்திர மீன்பிடி வள்ளம் சென்ற வியாழக்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வைபவத்தில் யாழ். மாவட்ட அதிபர், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், நகரசபைத் தலைவர் திரு. ந. நடராசா, பட்டினி ஒழிப்பு இயக்க, கூட்டுறவு இலாகா, மீன்பிடி இலாகா ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

மாகாண அதிபர் இவ்வைபவத்தில் உரையாற்றுகையில் இவ்வுதவிகள் நல்ல முறையில் பயன்படுத்தப்படவேண்டியது அவசியம் என வற்புறுத்தியதுடன் இவ்வுதவிகள்மூலம் மீனவர்கள் வாழ்க்கைத்தரம் உயருவதுடன் தொழில் துறையிலும் புனர்வாழ்வு ஏற்பட வழி பிறக்கும் என்றார்.

### 50 பிரேரணைகள் நிறைவேறின

கொழும்பு, சனி

இன்று பார்லிமெண்டில் தனிப்பட்ட அங்கத்தவர்கள் கொண்டுவந்த 50 பிரேரணைகள் நிறைவேறின. இலங்கை பார்லிமெண்ட் சரித்திரத்தில் இப்படி தனிப்பட்ட அங்கத்தவர்களின் பிரேரணைகள் மொத்தமாக 50 நிறைவேறியது இதுவே முதல் தடவையாகும்.

இந்த 50 பிரேரணைகளும் தனிப்பட்ட அங்கத்தவர்கள் தத்தம் தொகுதிகள் சம்பந்தமாகவும், நாட்டின் பொது விஷயங்கள் சம்பந்தமாகவும் கொண்டு வந்தவையாகும்.

51-வது பிரேரணையை சபை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோது கோரமின்மையால் சபை ஒத்தி வைக்கப்பட்டது.

### ஹாங்காங் தூதுகோஷ்டி

கொழும்பு, சனி

நாளை கொழும்பில் நடைபெறவிருக்கும் உலக பௌத்தசங்க மகாநாட்டில் ஐவர் அடங்கிய ஹாங்காங் தூதுக்கோஷ்டி கலந்து கொள்ளுகிறது.

## ரூ. 5000 சன்மானம்!

### ஹேவாகே பற்றிய தகவல் தருபவருக்கு கிடைக்கும்

கொழும்பு, சனி

பெப்ரவரி மாதம் நடைபெறவிருந்து தோல்வியுற்ற புரட்சி சதி சம்பந்தமாகப் பொலிசார் தேடிவரும் சுனில் ஹேவகே என்பவர் இன்னும் அகப்படவில்லை. அவரைக் கண்டு பிடிப்பதற்கான தகவல் தருபவர்களுக்கு ரூ. 1000 பரிசு தருவதாக பொலிசார் முன்னர் அறிவித்திருந்தனர். இப்பொழுது அந்தப் பரிசுத் தொகை ரூ. 5000 மாக அதிகரிக்கப் பட்டிருக்கிறது.

திரு சுனில் ஹேவகேயின் நடமாட்டங்கள் பற்றிய தகவல்களைத்தந்து அவரைக் கண்டுபிடிக்க உதவுபவர்களுக்கு பொலிஸார் இப்பொழுது 5 ஆயிரம் ரூபாய் சன்மானம் வழங்கத் தயாராய் இருக்கிறார்கள்.

இவர் இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகம் ஒன்றில் தகவல்பகுதியில் முன்னர் தொழில் புரிந்திருக்கின்றார்.

இவற்றைக்கண்டு பிடிப்பதற்கான ஏற்பாடுகளை பொலிசார் இப்போது தீவிரப்படுத்தியிருக்கிறார்கள். எல்லா பொலிஸ் நிலையங்களுக்கும் உஷார் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**இறைவரி**

## ஓவர்சியர் பரீட்சையில் 51 பேர் தெரிவு

### தமிழர் எவரும் இல்லை

யாழ்ப்பாணம், சனி

கடந்தவருடம் நடைபெற்ற ஸ்தல ஸ்தாபன இறைவரி ஓவசியர் பதவிக்கான பரீட்சையில் 51 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்களென்றும் இவர்களில் ஒரு தமிழராவது தெரிவு செய்யப்படவில்லையெனவும் அறியப்படுகிறது.

இதனை அகில இலங்கை ஸ்தல ஸ்தாபன சங்கத்தின் வடபகுதிக்கிளை ஸ்தலஸ்தாபன அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

வடமாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மேல் மாகாணத்திலும் தமிழ் பேசும் மக்களை மட்டும் கொண்ட 150.க்கு மேற்பட்ட கிராம, பட்டின. நகர மாநகரசபைகள் இருந்து இப்பகுதிகளிலிருந்து எவரும் தெரிவு செய்யப்படாதது வருத்தத்துக்குரியது என மந்திரிக்கு மேற்படி சங்கம் எடுத்துக் கூறியுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் தமது நிர்வாகத்தைத்தமது பிரதேச மொழியிலேயே நடத்தலாமென தேசிய அரசாங்கம் தீர்மானித்திருந்தும் குறிப்பிட்ட பகுதிகளில் பிரதேச மொழிகளில் கடமையாற்ற முடியாத வகையில் சம்பந்தப்பட்ட நியமனங்கள் அமைந்துள்ளன எனவும் சங்கம் மந்திரிக்கு சுட்டிக்காட்டியுள்ளது.

இதுசம்பந்தமாக ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர் சங்கமும் ஸ்தல ஸ்தாபனமந்திரிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ந நி)

### உரியவர் யார்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் விழுந்து கிடக்கக் காணப்பட்ட ஒரு மெத்தையும் 2 தலையணையும் மந்திகை உப தபாற்கந்தோரில் எடுத்து வைக்கப்பட்டுள்ளது. உரியவர் மேற்படி உபதபாற்கந்தோருக்கு நேரில் வந்து பெற்றுக்கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

## "இறுதிக்கால நேரு தத்துவம், மதம் பற்றியே பேசினார்"

### ராதாகிருஷ்ணன் தகவல்

புதுடில்லி, மே 7

பண்டித ஜவஹர்லால் நேரு தனது வாழ்வின் இறுதிக்காலத்தில் தம்மை வாரம் இரண்டு அல்லது மூன்று தடவை சந்திப்பது வழக்கம் என்றும், ஆனால் வழக்கம்போல அரசியலைப் பற்றி அவர் பேசுவதில்லை என்றும், அடிப்படைத் தத்துவம், மதம் ஆகிய விஷயங்களைப் பற்றியே அவர் தம்முடன் விவாதித்துவந்தார் என்றும் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் பார்லிமெண்ட் மண்டபத்தில் நேரு உருவப்படத்தை திறந்துவைத்தபோது கூறினார்.

இறுதிக்காலத்தில் அவ [illegible] பெருமலிருக்கும் பல விஷயங்களையும், பூர்த்தியுற்ற ஒரு சில விஷயங்களையும் பற்றி அவரது கண்ணோட்

(6-ம் பக்கம் பார்க்க)

**"பரந்தன் தொழிற்சாலையில்**

## சிங்கள தேர்ச்சி நிபந்தனையை ரத்துச் செய்ய உத்தரவு"

### தமிழரசுக்கிளை கோரிக்கை

மாவிட்டபுரம், சனி

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை லிகிதர்களுக்கான விண்ணப்பத்தில் சிங்களத் தேர்ச்சி வேண்டுமெனக் கூறப்பட்டிருப்பதனால் ஏராளமான தமிழ்ப் பிள்ளைகள் லிகிதர் சேவைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே சிங்களத் தேர்ச்சி நிபந்தனையை ரத்துச்செய்வதுபற்றி நடவடிக்கை எடுக்கும்படி தமிழரசுக் கட்சியின் தெல்லிப்பழைக் கிளை, தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் ஆகியோருக்கு முறையிட்டிருக்கிறது.

(6-ம் பக்கம் பார்க்க)



தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ் கோ.
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
(நூதனசாலைக்கு முன்பாக)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

வேலையில்லாக் கஷ்டத்தால் அவதியுற்றபோதிலும், பாங்கியில் பணமில்லாதபோதிலும், அகண்ட பரிபூரண சச்சிதானந்த இறைவன் உங்கள் உள்ளுக்குள்ளே உறைகிறான் என்பதை உணருங்கள். உணரப்பெற்றால் ஒரு தீங்கும் வராது.

—சுவாமி சிவானந்தர்.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 557

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு சித்திரை மீ 25உ (8-5-66)

# கலைச் சீர்திருத்தம்

இலங்கையிலே பள்ளிக்கூட சர்வகலாசாலை கல்வி முறையை திருத்தியமைக்க இரு மசோதாக்களை அமைச்சர் பார்லிமெண்ட் சபையில் கொணர்ந்து அவசரமாக நிறைவேற்றப்போவதாகப் பலத்த வதந்திகள் உலவுகின்றன. இந்நாட்டிலுள்ள கல்வி முறையைப் பற்றி மக்களிடையே அதிக அதிருப்தி நிலவிவருகிறது. ஆகவே சீர்திருத்தம் அவசியம்தான். என்றாலும் இப்போது நிலவும் வதந்திகள் உண்மையாயின் மந்திரியின் புதிய யோசனைகள் இப்போதுள்ள நிலைமையையும் மோசமாக்கிவிடுமோவென்று அஞ்சக்கூடியதாக உள்ள .

உதாரணமாக எட்டாம் வகுப்புக்குப் பின் மாணவர்கள் நான்கு பிரிவாகப் பிரித்து ஒரு பிரிவினரைச் சர்வகலாசாலைக்கும், மற்ற மூன்று பிரிவினரையும் மீன்பிடி, விவசாயம், கைத்தொழில் முதலிய துறைகளுக்கும் பயிற்சிபெற அனுப்புவதென்று யோசனை இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இது உண்மையாயின் இதுபற்றிப் பொது மக்களிடையிலும் மாணவர்களிடையிலும் அதிக அதிருப்தி ஏற்படலாம்.

மலைநாட்டிலே உள்ள தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சிங்கள மூலம் கல்வி போதிப்பதென்பது மற்றோர் யோசனையாம். தமது தாய்மொழி மூலம் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தாலே அவர்கள் சுலபமாகப் படித்து முன்னேறமுடியும் என்பது கல்வி நிபுணர்கள் ஒப்புக்கொண்ட கொள்கை. இக்கொள்கையை மலைநாட்டுத் தமிழர் விஷயமாக மாற்றுவது உண்மையாயின், அது சம்பந்தப்பட்ட பிள்ளைகளுக்குச் செய்யும் பெரிய அநீதியாவதுடன் புதிய கிளர்ச்சிகளுக்கும் இடமளிப்பதாகும். சிறுபான்மை மக்களுக்கு நீதியளிக்கவேண்டுமென்றும், தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்தவேண்டுமென்றும் கூறும் தேசிய அரசாங்கம், எக்காரணம் பற்றியும் இவ்வளவு நேர்மையற்ற யோசனைக்கு இடமளிப்பின் அது வீண்சங்கடங்களை விலைக்கு வாங்குவதுபோலாகும்.

இலங்கையில் இலவசக் கல்வி அமுலுக்கு வந்ததுடன் அநேகமாக எல்லாப் பள்ளிக்கூடங்களையும் அரசாங்கமே ஏற்று நடத்துகின்றது. இதன் பயனாகக் கல்விச்செலவு வருடாவருடம் அதிகரித்து, அரசாங்கத்தால் நிலைமையைச் சமாளிக்க முடியாமலுமிருப்பது பகிரங்க ரகசியம். ஒருபக்கம் பட்டதாரிகள் வேலையில்லாமல் தவிக்கையில் மறுபுறம் பல பள்ளிக்கூடங்களுக்குத் தகுந்த ஆசிரியர்கள் இல்லாமல் உள்ளது. இசை, தேகப்பயிற்சி முதலிய ஆசிரியர்கள் அதிகம் தேவையிருந்தும், பணச்செலவுக்குப் பயந்து அரசாங்கம் இவ்விஷயத்தில் 'சிக்கனத்தை'க் கையாளுகின்றது. இதனால் நம் மாணவ மாணவிகளின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறதென்பதை விளக்கத் தேவையில்லை. பலபள்ளிக்கூடங்களில் நல்ல தளவாடங்கள் இல்லாமல் நிலைமை மிக மோசமாக உள்ளது பகிரங்க ரகசியம்.

இந்த அவலநிலைக்கு முக்கிய காரணம், அரசாங்கத்தால், வளரும் இந்தக் கல்விப் பளுவைச் சமாளிக்க முடியாதது தான். இதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு அதற்கான பரிகாரத்தை தேடவேண்டியதே அரசாங்கத்துக்கு உள்ள நாணயமானவழி. இது கட்சி விஷயமல்ல; தேசிய விஷயம். எல்லாக் கட்சித்தலைவர்களும் சேர்ந்து ஒத்துழைத்து, இதைப்பற்றி அடியோடு பரிசீலனை செய்து நாட்டின் நன்மையையே முக்கிய நோக்கமாகக்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்வியமைச்சர் இரு மசோதாக்களையும் வெளியிட்டு பொது மக்களின் கருத்தை அறிவதுடன், எல்லாக் கட்சித்தலைவர்களும் ஒத்துழைத்துக் கட்சி, அரசியல் முதலிய நோக்கங்களை விட்டு, நம் மாணவமாணவிகளின் நன்மைக்கான முறையில் கல்விமுறையைத் துணிச்சலுடன் சீர்திருத்தி அமைப்பதே விவேகமும், தீர்க்கதரிசனமுமாகும்.

## யாழ்ப்பாணத் தியேட்டர்கள்

யாழ்ப்பாணத் தியேட்டர் நிர்வாகிகளின் ஒத்துழைப்புடன் மாநகரசபை சினிமா சாலைகளில் சில முக்கிய சீர்திருத்தங்களைச் செய்யத் தீர்மானித்துள்ளதாக நேற்று வெளியான ஒரு செய்தியை சினிமா பார்க்கும் பொது மக்கள் மிக மகிழ்ச்சியுடன் வரவேற்பர். தியேட்டர்களில் புகைப்பதற்குத் தடைவிதிப்பதுடன், சுகாதாரத்துடன் கூடிய சகல வசதிகளையும் தியேட்டர்களில் அளிக்கவும் சினிமா மனேஜர்கள் சம்மதித்திருப்பதாகவும் செய்திகூறுகின்றது. இந்த யோசனைகள் அமுலுக்கு வந்தால், சினிமா ரசிகர்களாகிய பொதுமக்களின் நீண்டகாலக் குறை நீங்கவும், சுகாதாரம் பாதுகாக்கப் படவும்கூடும். சிறப்பாக டிக்கெட் வாங்க, தெருவிலே மழையிலும், வெயிலிலும் மணிக்கணக்காக பொதுமக்கள் நிற்கவேண்டியிருப்பது ஒரு பெரிய கண்ணராவி இக்குறையும் நிறைசெய்யப்படும் என்றே நம்புவோம். மக்களின் பொழுது போக்குக்கு இக்காலத்தில் படமாளிகைகள்தான் முக்கியமாக உள்ளன. சென்னையிலே கூட சினிமாத் தியேட்டர்களில் குளிர்சாதனங்கள் முதலியன செய்து மக்களுக்கு அதிக வசதி செய்துள்ளனர். படமாளிகை மூலம் நல்ல வருமானம் கிடைப்பதால் நவீன வசதிகளை யாழ்ப்பாணத் தியேட்டர்களிலும் அமைத்து, பொது மக்களின் நீண்டகாலக் குறைகளை நீக்கி, யாழ்ப்பாணத்தின் நற்பெயரையும் உயர்த்துவரென்றே நம்புவோம்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்

# பிரஜா உரிமை வழங்கும் மசோதா விரைவில் வரும்

## பிரதமர் அறிவிப்பு

கொழும்பு, சனி

சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கையை அமுல் நடத்துவது சம்பந்தமாக முக்கிய விஷயங்களை ஆராய்வதற்காகதேசிய அரசாங்கக் கட்சிகளின் தலைவர்கள் சென்ற வார இறுதியில் நீண்டநேர விவாதம் நடத்தினர்கள்.

இவைபற்றி ஆராய்வதற்காக பிரதமர் திரு. டட்லி இக்கூட்டத்தை விசேஷமாகக் கூட்டியிருந்தார்.

சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கை அமுல் நடத்தப்படும்போது முதல் இருவருடங்களில் எதுவித பிரச்னையும் இருக்க மாட்டாது என தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கருத்து தெரிவித்தார்கள். 60,000 பேர் தாயகம் திரும்புவதற்கு ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளதாலேயே எவ்வித பிரச்னையும் இருக்க மாட்டாது என இவர்கள் சுட்டிக்காட்டினர்கள் ஆனால் இதன்பின் வெளியேற்றம் சம்பந்தமாக நியாமான வழி முறைகள் செயல்படுத்தப்படவேண்டும் என்றும் வெளியேற்றம் செய்யப்படும்வரை இங்கிருக்கும் போது அவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகள் இருக்க வேண்டுமென்றும் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்,

யார் வெளியேற்றம் செய்யப்படவேண்டும் என்பது பற்றி உத்தேசமான ஒரு நகல்திட்டம் தயாரிக்கப்படவேண்டும் என்றும் இங்கிருந்து தாயகம் செல்ல விரும்புபவர்கள் தமது சேமிப்புகளைச் செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கும் வகையில் வைத்திருப்பது இயலாத ஒரு காரியமென்றும் இத்தலைவர்கள் எடுத்துக்கூறினர்கள்.

தற்போது வேலைபார்த்துக்கொண்டிருக்கும் நாடற்றவரெவரும் பிரஜாவுரிமை இல்லையென்ற காரணத்துக்காக வேலையிலிருந்து நீக்கப்படக்கூடாதென்று தமிழரசுக்கட்சியினரும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸாரும் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்தனர். உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் இத்தகையவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வேலைநீக்க உத்தரவுகளுக்கு ஆட்சேபமும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம் அமுல் நடத்தப்படும் போது எவரும் சங்கடத்துக்குள்ளாக்கப்படமாட்டார்கள் என பிரதமர் தெரிவித்தார். இலங்கையில் தங்கியிருப்பவர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்குவது சம்பந்தமான மசோதா விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படுமென்றும் பிரதமர் தெரிவித்தார்.

இதற்கிடையே சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கையை அமுல் நடத்துவதற்காக 9,75,000 பெயர்களைக் கொண்ட பட்டியலை குடியேற்றவெளியேற்றஇலாகா தயாரித்துள்ளதாக அறியப்படுகிறது.

## கண்ணகி அம்மன் கோவில் உற்சவம்

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவு கண்ணகி அம்மன்கோவில் பூங்காவனத் திருவிழா நேற்று நடைபெற்றது. சேல்லன் நா. சண்முகம் ''பட்டினத்தார்'' என்னும் பொருள்பற்ற கதாப் பிரசங்கம் நிகழ்த்தினார்

## புலவர்மணிக்கு பாராட்டு

ஊர்காவற்றுறை, சனி

சரவணைக் கிராமத்தைச் சேர்ந்த புலவர்மணி திரு. ஆ. தில்லைநாதபிள்ளையின் சேவையைப் பாராட்டுமுகமாக வேலணை ஆத்திசூடி வித்தியாசாலையில் பாராட்டு விழா ஒன்று நடைபெற்றது.

எண்பத்துநான்கு வயது நிரம்பிய புலவர்மணியைப் பாராட்டிப் பல அறிஞர்கள் பேசினர். தீவுப்பகுதி எழுத்தாளர்சங்க ஆதரவில் நடைபெற்ற இவ்விழாவில் புலவருக்குப் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி அளிக்கப்பட்டது.

## பிரிவுபசாரம்

பருத்தித்துறை, சனி

புலோலி மெதடிஸ்தபாடசாலைத் தலைமையாசிரியராகக் கடமையாற்றி புற்றளை வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட தலைமையாசிரியர் திரு. த. சிதம்பரப்பிள்ளைக்கு மேற்படி வித்தியாசாலை ஆசிரியர் சங்கம் பிரிவுபசார விருந்தொன்றளித்துக் கௌரவித்தது.

## குருநாதன் காலமானார்

சென்னை, மே 7

பிரபல கிரிக்கெட் விமர்சகரான திரு. எஸ். கே. குருநாதன் சென்னையில் காலமானார் அவருக்கு வயது 58.

# ஐயாறன் எழுதுவது

கண்டியிலே மல்வத்தை பீடாதிபதிக்கு பெரிய மாளிகையை தானமாக அளித்த விழா விபரங்களைப் படித்தேன். உடன் இங்கு நம் இந்து குருமார்களின் குடியிருப்புத்தான் நினைப்பு வந்தது.

சில குருமார்களுக்கு வீட்டு வசதிகளுள்ளன தான். ஆனால் பல இடங்களிலே உள்ள நிலைமையைப்பற்றி சைவ சமூகம் பெருமை கொள்ளமுடியாது. இதற்கு எப்போது விமோசனமோ?

ஃ ஃ ஃ

கொழும்பிலே ஒரு கோவில். வருடத்தில் 20 ஆயிரம் ரூபாய் வருமான வரியாக அக்கோவில் அரசாங்கத்துக்குச் செலுத்துகின்றதாம் அவ்வளவு சொத்துக்களுண்டு. ஆனால் பூசகர் யாரும் நிலைத்திருக்கவில்லை என்றும் நல்லபூசகர்வேண்டுமென்றும் அக்கோவில் நிர்வாகி, ஓர் அன்பரிடம் கேட்டாராம்.

உடனே அந்த அன்பர் ''பூசகருக்கு என்ன சம்பளம்?'' என்று கேட்டதற்கு 'மாதம் நூறு ரூபாய்' என்று பெருமையுடன் பதில் தெரிவித்தனர்.

கேள்வி: 'உங்கள் மோட்டார் ஓட்டும் டிரைவருக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கிறீர்கள்?'

பதில்: ''ரூபா 150''

கே: அப்படியாயின் பூசை செய்யும் குருக்களின் அந்தஸ்து, மோட்டார் ஓட்டுபவரைவிடக் குறைவானதா. இக்காலத்தில் ஒருபெரிய குடும்பம்நடத்த நூறுரூபாய் போதுமா?

ப: வேறு கோவில்களில் சம்பளம் ரூ. 60 தானே கொடுக்கிறார்கள். நாங்கள் குருக்களுக்கு அதிகம் கொடுத்தால், மற்றக் கோவிலார்கள் எங்களைக் குறை கூறுவார்களே!

''அப்படியாயின் நல்ல குருக்கள் வேண்டுமென எதிர்பாராதீர்கள்'' என்று அன்பர் பதில் சொல்லிவிட்டு வந்தாராம்.

இந்து சமயத்துக்கும் சமூகத்துக்கும் உயிர்நிலையம் நமது கோவில்களே அங்கு பூசை செய்பவர் ஆகம சாஸ்திரங்களில் நல்ல தேர்ச்சி பெற்றவராகவும், பக்திசிரேஷ்டராகவும் இருக்க வேண்டும். மனத்திருப்தியுடன் இருந்து அவர் பூசை செய்ய போதிய ஊதியம் அளிக்கவேண்டும். அப்போதுதான் தக்கவர்கள் அப்பொறுப்பை ஏற்கவருவர். சம்பளத்தை மிகக் குறைவாகக் கொடுப்பதால் திறமைவாய்ந்தவர்கள் வேறு தொழில்களுக்குச் சென்றுவிடுகின்றனர். நமது கோவில்களுக்குத் தகுதி வாய்ந்த அறிவாளிகள் குருக்கள்களாக வரவேண்டுமாயின், மற்ற மதத்தினர்காட்டும் வழியைப் பார்த்தாவது தக்க ஊதியமும் மரியாதையும் அளிக்கவேண்டாமா?

ஃ ஃ ஃ

யாழ்ப்பாண விஜயம் பற்றி மகாநாயக்கதேரோ கண்டி விழாவில் பேசுகையில், இது வரண்ட பிரதேசமாயினும் மக்களின் உழைப்பால் பல இடங்களிலும் பசுஞ்சோலைகள் ஏற்பட்டு மனதைக்கவருவதாகக்கூறி, உழைப்பில் நம்மவர்களை சிங்களர் பின்பற்றவேண்டுமென்றும் கேட்டிருக்கின்றார்.

பிரதமர் டட்லி சேனநாயகா அங்கு பேசியதைப் பற்றி 'டைம்ஸ்' பத்திரிகையில் வெளியான செய்தி பிரதமர் மீது பெரிய தப்பபிப்

(4-ம் கலம் பார்க்க)

(5ம் கலத் தொடர்ச்சி)

பிராயம் ஏற்படுத்துவதாக இருந்தது 'பௌத்த மதத்தை வடக்கிலும் பரப்புவதற்கு வசதியான சூழ்நிலையை மகாநாயகா தமது விஜயத்தால் ஏற்படுத்தியிருக்கிறார் என்று பிரதமர் கூறியதாக 'டைம்ஸ்' வெளியிட்ட செய்தி இங்கு பலர் மனதையும் புண்படுத்தியது. ஆனால் 'டெயிலிநியூஸ்' வெளியிட்ட விபரமான செய்தியில் 'மகாநாயகாவின் வட மாகாண விஜயம், இந்நாட்டில் சமூக ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் பலப்படுத்த உதவியுள்ளது' என்று பிரதமர் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளது.

இரு செய்திகளுக்கும் எவ்வளவு வித்தியாசம்! 'டைம்ஸ்' பத்திரிகைக்கு பிரதமர் ஒரு மறுப்பு அனுப்பி திருத்தச்செய்வது அவசியமாகும். இதில் அலட்சியமாக இருக்கப்படாது.

ஃ ஃ ஃ

மூரி முழங்கொலி நீரானான் கண்டாய் முழுந்தழல்போல் மேனி முதல்வன் கண்டாய். ஏரிநிறைந்தனைய செல்வன் கண்டாய் இன்னடியார்க்கின்பம் விளைப்பன் கண்டாய், ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் அண்ணாமலை யுறையெம் அண்ணல் கண்டாய், வாரிமதகளிறே போல்வான் கண்டாய் மறைக்காட்டுறையும் மணாளன் தானே.

—அப்பர் சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவுக்கு

# அடுத்த 5 ஆண்டுகளில் 450 கோடி டாலர் உதவி

# வழங்கும் திட்டம்

## கொள்கை அளவில் உலகவங்கி அங்கீகாரம்

### அமெரிக்க உதவியும் அதிகரிக்கும்?

வாஷிங்டன், மே 7

அடுத்த 5 ஆண்டுகளுக்கு 450 கோடி டாலர் இந்தியாவுக்கு உதவி வழங்கும் திட்டம் ஒன்றை உலக வங்கி கொள்கை அளவில் ஆமோதித்துள்ளது என வாஷிங்டன் செய்திகள் கூறுகின்றன. ஆனல் திட்டவட்டமான பொறுப்பு இன்னும் ஏற்கப்படவில்லை.

இந்தியாவின் 4-ம் ஐந்தாண்டுத் திட்டத்தை உலக வங்கியும், அமெரிக்காவும் இப்போது தீவிரமாக ஆராய்ந்து வருகின்றன.

ரஸாயனத் தொழில் சம்பந்தமான உதவிபற்றி உலகவங்கி தெளிவாகத் தெரிவித்திருக்கிறதென்றும் வாஷிங்டன் செய்திகள் மேலும் கூறின.

4-ம் திட்டத்துக்கு அமெரிக்கா உதவியளிக்கும் என்றும், உதவிகளை அதிகரிக்க உலகவங்கியும் அமெரிக்காவும் ஆவல் கொண்டிருப்பதாகவும் வாஷிங்டன் சென்றிருந்த திட்ட மந்திரி அசோக் மேத்தாவிடம் உறுதியளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

திரு. மேத்தா கடந்த மூன்று வாரங்களாக ஜனதிபதி ஜோன்ஸன், வெளிநாட்டுமந்திரி ரஸ்க், உலக வங்கித் தலைவர் உட்ஸ் ஆகியோருடனும், கனடாவில் நிதி, வெளிநாட்டுமந்திரிகளுடனும் நடத்திய பேச்சின் விளைவாக, நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அங்குள்ள இந்திய வட்டாரங்கள் கூறின.

உதவிக் குழுவிடமிருந்து திரு. அசோக்மேத்தா 840 கோடி டாலர் உதவி கோரியிருந்தார்.

## ஜனதிபதி சுகர்ணேவின் அதிகாரத்துக்கு சவால்

### ஜாகர்த்தா வீதிகளில் துருப்புக்கள் ரோந்து வருகின்றன

ஜாகர்த்தா, மே 7

ஜாகர்த்தா வீதிகளில் மீண்டும் ராணுவம் நடமாட ஆரம்பித்திருக்கிறது.

ஜனதிபதி சுகர்ணேவின் அதிகாரத்தை வரையறுப்பதுபற்றியும் அவர் ஆயுட்கால ஜனதிபதியாக நீடிப்பதை எதிர்ப்பதுபற்றியும் நடைபெற்ற முயற்சிகளைத் தொடர்ந்து நெருக்கடி ஏற்பட்டதால், ராணுவம் ரோந்து சுற்ற ஆரம்பித்தது.

இதற்கிடையில் அடுத்த வாரம் கூடவிருந்த மேலாதிக்க சட்டமன்றத்தின் கூட்டத்தை ஜெனரல் சுகர்ட்டோ ஒத்திவைத்திருக்கிறார். ஜனதிபதியின் மீது இச்சபைக்கு அதிகாரம் கிடையாது என அவர் கூறியிருக்கிறார். இதற்கிடையில் சீனவில் முன்பு இந்தோனேஷியத் தூதராக இருந்த ஜமோடோ கைதுசெய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

முன்னள் துணை அதிபர் டாக்டர் ஹாட்டா ஒரு கூட்டத்தில் பேசுகையில், வடக்கின் ஆதிக்கத்திலிருந்து இந்தோனேஷியா சுதந்திரமாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். சீனபற்றியே அவர் அப்படிக் குறிப்பிட்டதாகக் கூறப்பட்டது.

ஆசிய ஆபிரிக்க கோஷ்டியிலும், மண்டலசார்பற்ற கோஷ்டியிலும் இந்தியா ஒரு முக்கிய நாடு என்பதை மறுக்கமுடியாது என்றும், கடந்த காலத்தில் இந்தியாவுக்கும் இந்தோனேஷியாவுக்குமிடையே கருத்து வேற்றுமை இருந்தபோதிலும், இப்போது அந் நாட்டுடன் உறவைச் சீர்திருத்த புதிய அரசாங்கம் முயலும் என்றும் ஜெனரல் சுகர்ட்டோ தெரிவித்திருக்கிறார்.

## பாகிஸ்தான் இல்லை

ராவல்பிண்டி, மே 7

வருகிற 19-ம் திகதி நடைபெறவிருக்கும் ஸீட்டோ கடற்படை ஒத்திகையில் பாகிஸ்தான் கலந்து கொள்ளாது எனத் தெரிகிறது. சென்ற செப்டம்பர் மாதம் நடைபெற்ற ஸீட்டோ ஒத்திகையிலும் அது கலந்து கொள்ளவில்லை.

இம்முறை பிரான்சும் இந்த ஒத்திகையில் கலந்து கொள்ளாது.

## ஸ்ரீமதி காந்தி

பூன, மே 7

பாகிஸ்தான் டாஷ்கண்ட் ஒப்பந்தத்தைக் கைவிட்டபோதிலும் இந்தியா அதைத் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் என பிரதமர் இந்திரா காந்தி இங்கு கூறினர்.

ஆனல் பாகிஸ்தான் மீண்டும் சண்டையைப் புகுத்தினல் அதைச் சமாளிக்க ராணுவமும், மக்களும் தயாராக இருப்பதாயும் அவர் கூறினர்.

## பர்மா வெற்றி

மணிலா, மே 7

இங்கு நடைபெற்ற 8-வது யுவர் உதைபந்தாட்டத்தில் பர்மா தாய்லாந்தை 5—1 கோல்களால் தோற்கடித்தது.

## ரஷ்யாவின் கிரகம்

மாஸ்கோ, மே 7

கொஸ்மோஸ் 113 என்ற வான் கிரகம் ஒன்றை ரஷ்யா அனுப்பிவைத்திருக்கிறது.

அமெரிக்க

## விமான இயக்கம் குறைக்கப்படும்

வாஷிங்டன், மே 7

திடீர்த் தாக்குதல்களுக்கு எதிராக இயக்கப்படும் வெடிகுண்டு விமானங்களின் பாதியை அமெரிக்கா குறைக்கவிருக்கிறது. இந்த வேலைகளைச் செய்ய ரடார் சாதனமேபோதியதென்றும் அதன் அறிவிப்பைத்தொடர்ந்து 15 நிமிடங்களில் விமானங்களை உயரே செலுத்த முடியும் என்றும் பாதுகாப்பு மந்திரி மக்னமாரா கூறினர்.

சதா பறந்துகொண்டிருக்கும் 600 விமானங்களில் இனி 300 பட்டும் தொடர்ந்து பறக்கும்.

## வியட்னும்

சைகோன், மே 7

தென் வியட்னமில் சைகோனுக்கு 450 கிலோ மீட்டர் தூரத்தில் தொடர்ந்து பெரிய சண்டை நடக்கிறது.

இச்சண்டையில் 141 வியட்காங்கியரைக் கொன்றுவிட்டதாக அமெரிக்கர்கள் கூறினர்.

குவான்தீவில் மையம் கொண்டிருக்கும் அமெரிக்க வெடிவிமானங்கள் கம்போடியா எல்லைக்கருகே வியட்காங்கியரைத் தாக்கியதாக அறிவிக்கப்பட்டது.

வடவியட்னமில் விமான தொடர்புபீரங்கிகள், ரடார் நிலையங்கள் ஆகியனவற்றையும் யு. எஸ். விமானங்கள் தாக்கின.

## பாகிஸ்தானில் பர்மிய அதிபர்

ராவல்பிண்டி, மே 7

பர்மிய அதிபர் நீவின் தமது பத்தினியுடனும், வெளிநாட்டு மந்திரி ஊதிஹாவுடனும் 4 நாள் பாகிஸ்தானிய விஜயத்தை முன்னிட்டு இன்று ராவல்பிண்டிவந்தார்

## பாகிஸ்தான் பல்கலைக்கழகம்

ராவல்பிண்டி, மே 7

பாகிஸ்தானில் மூன்று புதிய பல்கலைக்கழகங்கள் திறக்கப்படவிருக்கின்றன. இவற்றில் இரண்டு கிழக்கு பாகிஸ்தானில் அமைக்கப்படும்.

## 20 பேர் கைது

ஷில்லாங், மே 7

சமீபத்தில் ஏற்பட்ட ரயில் வெடிப்பு சம்பந்தமாக 20 பேர்கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

கிழக்கு பாகிஸ்தானில்

## காலராவுக்கு 675 பேர் பலி

டாக்கா, மே 7

கிழக்குப் பாகிஸ்தானில் இரு ஜில்லாக்களில் காலரா, வைசூரி காரணமாக 676 பேர் மாண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## முத்தரப்பு பேச்சு

புதுடில்லி, மே 7

உத்தேச முத்தரப்பு பேச்சுக்கள் சம்பந்தமாக ஐக்கிய அராபிக் குடியரசு, யூகோஸ்லேவியா, இந்தியா ஆகிய நாடுகள் தொடர்பு கொண்டிருக்கின்றன. பேச்சுகளுக்கான திகதி இதன் மூலம் நிர்ணயிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

## அமெரிக்க அணுசோதனை

நெவாடா, மே 7

நெவாடாவில் அமெரிக்கா [illegible] ஒன்றை நேற்று நடத்தியது. கடந்த 3 தினங்களில் நடத்தப்பட்ட 3-வது அமெரிக்க அணுசோதனை இதுவாகும்.

## அப்பருக்கு இணை உண்டோ?

### காஞ்சி குரு அருள் வாக்கு

இந்த நாட்டில் தோன்றிய அப்பருக்கு மத ஈடுபாடு அதிகமாக இருந்தது. அவர் சமணமதத் தலைவராக இருந்தார். அவரது தமக்கையார் திலகவதியார் சிவனிடம் ஈடுபாடுடையவர். தம்பியை சைவசமயத்திற்கு அழைத்துக்கொள்ளத் தவமிருந்தார். அவரிடம் திருநீறு பெற்று பழைய சமயத்திற்கே வந்து கூப்பர் சேர்ந்தார். அதன்காரணமாக அவர் மாபெரும் துன்பங்களுக்கு ஆளானர். அத்தனை சோதனைகளிலும் அவர் வெற்றிகண்டார். அவர் தன்னைச் சுண்ணும்புக்காளவாய்தனில் வைத்திருந்த போது அவ்விடமும் அவருக்கு இன்பமாக இருந்ததென்பதை 'மாசில்வீணையும்... இணையடி நீழலே' என்ற தேவாரப் பாட்டால் கூறியுள்ளார். எப்போதும் ஈசன் ஒருவனின் இணைந்த இரு அடிகளின் நீழலில் இருக்கவேண்டும் என்கிறார்.

இளவேனிற்காலம் தான் எல்லா மக்களுக்கும் இன்பத்தைக் கொடுக்கக்கூடியது. காதுக்கு இன்பம் அபஸ்வரமற்ற வீணைநாதம், சித்திரைமாத மாலை பௌர்ணமிதினம் சந்திரன், உதயம், சரீர உணர்ச்சிக்கு இன்பம் தென்றல்காற்று வசந்த காலத்தின் காரணமாக ருசியுள்ள பழங்கள் வண்டுகள் ரீங்காரம் செய்துகொண்டு இருக்கும். தாமரைத் தடாகக்கரையிலே புஷ்பங்களின் வாசனை இவை ஐந்தும் பஞ்சேந்திரியங்களுக்கும் இன்பத்தைக் கொடுக்கின்றன. அவ்வின்பத்தை எல்லாம் அவர் ஈசனின் இணையடிநிழலில் கண்டதாகக் கூறியுள்ளார். அதுபோன்று நாமும் தேவாரம் போன்ற பாடல்களை மனனம்பண்ணி ஈசனின் இணையடிநிழலிலே இருக்கவேண்டும் என்பது கருத்து.

வடக்கே கங்கைக்கரையில் இருப்பது பாடலிபுத்தரம் மகத நாட்டினது. அதுபோலிங்கும்பாடலிஸ்தலம். பாடலிமலர் மிகவும் குளுமையுடையது அது சரீரத்தின் உஷ்ணங்களையெல்லாம் போக்கவல்லது. அதுபோன்று பாடலீஸ்வரனை வணங்குபருடைய எல்லா உஷ்ணங்களும் தணிந்து போகும். மேலும் ஒருநாட்டிலுள்ள கல்வெட்டுகளில் மகதைநாடு என்று இதனைக் குறிப்பிட்டுள்ளார். வடக்குப் போலவே நடுநாடான மகதைநாட்டின் தலைநகரம் பாடலி நகரம்.

இந்நாட்டில்தான் பெரிய சமயக்குரவர்கள் தோன்றி வளர்ந்தது. ஞானப்பயிர் செழிக்க இந்த மண் மிகவும் சௌகரியமாயிருக்கின்றது. அப்பர் நமக்காக மிகவும் கஷ்டங்களை அனுபவித்தவர். அவர்களது வாக்குகளை நாம் நன்கு மனனம் பண்ணிகொஞ்சம்முயன்றல் நாமும் ஞானத்தை பெற்றுவிடமுடியும்.

—கடலூரில் சொற்பொழிவு.

பிறந்ததின எதிரொலி

## நேதாஜியை நேருவுடன் சமமாகக்கருத முடியாதா?

### டில்லிராஜ்யசபையில் அங்கத்தினர்கள் ஆத்திரம்

புதுடில்லி, மே 7

நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்ததினத்தையொட்டி அகில இந்திய ரேடியோவில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை தான் விசேஷ நிகழ்ச்சிகள் நடத்த வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்று செய்தி - ஒலிபரப்பு இலாகா உதவி மந்திரி ஸ்ரீமதி நந்தினி ஸத்பதி ராஜ்யசபையில் சொன்னபோது எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் ''வெட்கம் வெட்கம்'' என்றுகூச்சலிட்டனர்.

பிறந்ததினம் கொண்டாடப்படவேண்டிய தலைவர்கள் பலர் இருக்கிறார்கள் என்றும், ஆனல் நேதாஜியின் பிறந்ததினத்தை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை அனுஷ்டிப்பதென்ற புதிய முடிவு மேற்கொள்ளப்பட்டது என்றும் உதவி மந்திரி சொன்னதும் திரு. ஸ்ரீஸென்குப்தாவும் மற்றும் சில அங்கத்தவர்களும் அதைப் பலமாக ஆட்சேபித்தனர். ''பல தலைவர்கள் என்று சொன்னதை மந்திரி வாபஸ் வாங்கவேண்டும் அப்படிச் சொல்வது நேதாஜியை அவமதிப்பது போலாகும்'' என்று அவர்கள்சொன்னர்.

''அப்படிச் சொன்னதற்காக வருந்துகிறேன்'' என்று திரு. ஸ்ரீ மதிஸத்பதி கூறினர். நேதாஜியை மரியாதைக் குறைவாகப் பேசவேண்டும் என்பது தமது நோக்கமல்ல என்றும் சொன்னர்.

செய்தி இலாகா மந்திரி ஸ்ரீ ராஜ்பகதூர் நிலையை விளக்கியபோது, அங்கத்தவர்கள் அடிக்கடி குறுக்கிட்டுப் பேசினர். பிறந்ததினக் கொண்டாட்ட விஷயம் மத்திய நிகழ்ச்சி ஆலோனைக் கமிட்டியிடம் விடப்பட்டது. மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, லால்பகதூர் சாஸ்திரி ஆகியோர்களின் பிறந்த தினங்களையொட்டி ரேடியோவில்ஒவ்வொருஆண்டும் விசேஷ நிகழ்ச்சிகள் நடத்தப்படவேண்டு என்றும், நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் டாக்டர் ராஜேந்திர பிரசாத், பண்டிதர்பந்த் ஆகியோரின் பிறந்ததினங்களைஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை அனுஷ்டிக்கவேண்டும் என்று அக்கமிட்டி ஏகமனதாக முடிவு செய்துள்ளது என்று ஸ்ரீ ராஜ்பகதூர் கூறினர்.

நேதாஜி போஸை ஏன் பண்டிதநேரு, லால்பகதூர் சாஸ்திரி ஆகியோருக்கு சமமாகக் கருதக்கூடாது என்று ஸ்ரீ முரஹரி கேட்டார். அரசாங்கக் கட்சியிலுள்ள சில தேசியத் தலைவர்களைவிட நேதாஜி நாட்டின் விடுதலைக்காக அதிக தொண்டு செய்திருக்கிறார் என்றும் அவர் சொன்னர்.

நாட்டின் விடுதலைக்காக நேதாஜி செய்துள்ள தொண்டுக்காக அவரிடம் அரசாங்கக் கட்சியினருக்கு உள்ள மதிப்பும், மரியாதையும்மற்றயாருக்கும்குறைந்ததல்லவென்றும், இவ்விஷயம் ஒரு உயர்தரக் கமிட்டியிடம் விடப்பட்டது என்றும், இவ்விஷயங்களில் தலைவர்களை ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல என்றும், இவ்விஷயத்தில் கமிட்டியின் சிபார்சுப்படி அரசாங்கம் நடக்கிறது என்றும் கூறினர்.

இந்தப் பதிலில் திருப்தி அடையாத எதிர்க்கட்சி

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழில் வளர்ச்சிக்கு உழையுங்கள்

## பெண்களுக்கு எம். பி. வேண்டுகோள்

வல்வெட்டித்துறை, சனி

"பிறநாட்டிலிருந்து இறக்குமதிப் பொருள்களை எதிர்பாராமல் தங்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களைத் தாமே உற்பத்தி செய்து சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் பழக்கத்தைப் பெண்கள் பழகிக்கொள்ள வேண்டும். பெண்கள் ஓய்வு நேரங்களில் குடிசைத் தொழில்களான நெசவு செய்தல், சட்டிபானை வனைதல், பாய் இழைத்தல் ஆகிய வற்றில் ஈடுபட்டு தமது நேரத்தை உபயோகமாகச் செலவிடுவதோடு பொருளாதாரத்தையும் விருத்தியுறச் செய்யலாம்'

இவ்வாறு பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் புனித தோமஸ் பெண்கள் பாடசாலையில் புனித தோமஸ் மாதர் முன்னேற்றச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. பி. நவரத்தினராசா பேசுகையில் பெண்களும், ஆண்களும் ஒன்று சேர்ந்து கைத்தொழில்களில் ஊக்கம்காட்டினல் நமது நாடு பலபொருள்களுக்கு வெளிநாடுகளை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஓரளவு நீங்கிவிடும் என்ருர்.

பின்வருவோர் சங்கத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப் பட்டனர்:-

போஷகர்; திரு. கே. துரைரத்தினம், தலைவர்: செல்வி மேரிஜடா பாக்கியநாதர். உபதலைவர்: செல்வி றீத்தா டாவிலுப்பிள்ளை. செயலாளர்: திருமதி ஏ. அருளானந்தம், உபசெயலாளர்: செல்வி கிளாரம்மா மரியாம்பிள்ளை, பொருளாளர்: திருமதி மேரி ஞேசாரிகிறீன் நான்கு பேர்கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.


REGAL—JAFFNA
NOW SHOWING!
Sidney James
Liz Fraser
in
DOUBLE BUNK

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஆனந்தன் - சந்திரகாந்தா
நடித்த
நானும் மனிதன்தான்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45க்கு
மனேகர் - மனேரமா
நடித்த
கொஞ்சும் குமரி


## ஸ்தாபனத்தின் முன்மாதிரி

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோப்பாய் சந்தியில் பஸ் பிரயாணிகள் தங்கும் இடம் ஒன்றை புதிதாக ஆர். வி. ஜி. பீடிக் கம்பனி ஸ்தாபனத்தார் அமைத்துள்ளனர். புறக்டர் வி. முத்துக்குமாரசாமி இதற்குரிய காணியை அன்பளிப்புச் செய்திருந்தார். பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் உட்படபலர் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

## மின்சாரம் இல்லை

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறை பட்டின சபைக்குட்பட்ட பகுதியில் கடந்த சில நாட்களாக மின்சாரம் இல்லாமல் பொது மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். மின்சாரப் பகுதியின் இணைப்பு இயந்திரம் (டிரான்ஸ் போமர்) பழுதுபட்டமையே இம்மின்சார நிறுத்தத்திற்குக் காரணமாகும். இதனல் இன்னும் ஒரு மாத காலத்திற்கு மின்சாரம் பெறமுடியாது எனச் சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். கொழும்பு தலைமை மின்சாரப் பகுதிக்கு இதுபற்றி அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## 10 பேருக்கு உபகாரச்சம்பளம்

கொழும்பு, சனி

இலங்கையர்களான 10 இளைஞர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதற்கு மெரிக்பீல்ட் சேர்விஸ் என்ற ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

உபகாரச் சம்பளத்தின் மூலம் கல்விபயிலத்தேர்ந்தெடுக்கப்படும் இளைஞர்கள் அமெரிக்காவில் ஒரு வருடகாலம் தங்கி, அங்குள்ள உயர்தரக் கல்வி கூடங்களில் பயிற்சிபெறுவார்கள்.

## கல்வி மந்திரியின் இரு மசோதாக்கள்

கொழும்பு, சனி

கல்வி மந்திரி திரு. இரியகொல்ல தயாரித்திருக்கும் கல்வி சம்பந்தமான இரண்டு மசோதாக்களின் நகல்கள் இன்று அரசாங்கப் பாரிலிமெண்டரி குழு அங்கத்தவர்கள் மத்தியில் விநியோகிக்கப் பட்டன. இந்த மசோதாக்கள் குறித்து 13-ம் திகதி கூடி குழு விவாதிக்கும்.

## 'நபிதினத்தை விடுமுறையாக்குக'

அளத்துகம, சனி

முகமது நபி பிறந்ததினமான ஜூலை 2-ந் திகதியை பொது விடுமுறை தினமாக்கும்படி பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயக்காவைக் கேட்பதென அளுத்துகம பட்டினசபை தீர்மானித்து.

## மீண்டும் தலைவராக தெரிவு

கொழும்பு, சனி

திரு. அசோகா பெரேரா மீண்டும் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருடன் போட்டியிட்ட திரு. சேர்மின் பெரேரா 1960-ம் ஆண்டு தொடக்கம் 1964-ம் ஆண்டு வரை சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றியுள்ளார்.

## சைக்கிளில் சுற்றுப்பிரயாணம்

உடுப்பிட்டி, சனி

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி முதல்வருட தமிழ் வணிக மாணவர்கள் தமது விடுமுறைத்தினத்தை யொட்டி அண்மையில் 50 மைல் சைக்கிள் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டனர்.

## ஐ. நா. அமைதிப் படைத் தலைவர்

நியூயோர்க், மே 7

பிலிப்பைன்ஸைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் மார்ட்டோவா சைப்பிரஸில் ஐ. நா அமைதிப் படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். ஜெனரல் திம்மையா ... இந்தப் பதவி காலியாக இருந்தது.

# சாட்சிக்கு 100 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், சனி

சிறுப்பிட்டி கொலைமுயற்சி வழக்கில் சாட்சியமளித்த 74 வயதான பூதத்தம்பி கார்த்திகேசு என்பவர், பொய்ச் சாட்சியமளித்தகுற்றத்திற்காக 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது,

அபராதத்தை விதித்த நீதியரசர், அபராதம் கட்டுவதற்கு ஒருமாத கால தவணையும் கொடுத்து, அபராதம் கட்டத்தவறினல் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையென்றும் தெரிவித்தார்.

வயது காரணமாகவே அபராதம் விதிப்பதாகவும் அல்லது 3 மாத கடூழிய சிறைத்தண்டனை விதிக்க அதிகாரம் இருக்கிறதென்றும் தெரிவித்தநீதியரசர், "இந்த வழக்கை நீர்தான் உருவாக்கினீர்" என்றும், "எதிரிக்கு எதிராக இவ்வழக்கை உருவாக்கினீர்" என்றும் கூறினர்.

"இக்கோர்ட்டில் பொய்ச் சாட்சியம் அளித்ததற்கு ஏன் தண்டனை விதிக்கக்கூடாதென்பதற்கு காரணம்காட்டமுடியுமா" என்று நீதியரசர் கேட்டபோது "ஒன்றும் சொல்ல முடியாமலிருக்கிறேன்" என்று சாட்சி கூறினர்.

நீதியரசர்: "இந்த வழக்கில் விதானையார் வீட்டிற்கு சென்று டிராக்ரர் கமுகமரத்தைவிழுத்தி விட்டதாக மட்டும் சொன்னேன் என்று முதலில் கூறினீர். பின்பு இதே கோர்ட்டில், விதானையாருக்கு, உம்மையும் டிராக்டரால் மோதப் போவதாக எதிரி பயமுறுத்தியதாகவும் சொன்னதாகக் கூறினீர். இரு சாட்சியமும் உண்மையாயிருக்க முடியாது. இக்கோர்ட்டில் இரண்டு வெவ்வேறு விதமான சாட்சியமளித்திருக்கிறீர். ஜூரிமாரும் உமது சாட்சியத்தை நம்பவில்லை. விதானையாரிடம் நீர் அளித்த சாட்சியம் இந்தவழக்கில் முக்கிய அம்சம். முக்கிய விஷயத்தில் பொய் சொல்லியிருக்கிறீர் நீர்பொய்சாட்சியம் அளித்ததற்கு குற்வாளியாக கண்டிருக்கிறேன். ஆதலால் உமது வயது காரணமாக, அபராதம் விதிக்கிறேன்."

பூதத்தம்பி கார்த்திகேசு இவ்வழக்கில் சாட்சியமளித்தபோது, தான் சிவில்வழக்குகள் நடத்தவில்லையென்றும் கிரிமினல் வழக்குகள் நடத்தியிருப்பதாகவும், கிரிமினல் வழக்குகளில், 1-ம் வழக்கில் எதிரியாகவும், இரு வழக்கில் வழக்காளியாகவும் இருந்தாரென்றும், வழக்காளியாக இருந்த வழக்கு, கிராமக் கோர்ட்டில் நடந்ததாகவும், அந்தவழக்கு மாடு பயிர் அளித்த வழக்கென்றும் கூறினர்.

## 'கூட்டுறவு நாட்டுக்கு உயர்வளிக்கும்'

உடுப்பிட்டி, சனி

"இப்பகுதியில் கூட்டுறவு முறையில் ஒரு சப்பாத்துத் தொழிற்சாலை நிறுவப்பட்டு மிகவும் சிறந்த முறையில் இயங்கி வருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கூட்டுறவுதான் இந்நாட்டுக்கு உயர்வை அளிக்கும். விவசாயம், கைத்தொழில் போன்றவை கூட்டுறவு அடிப்படையிலேயே செய்யப்பட வேண்டும். இதனல் இலாபம் தனி மனிதனுக்குச் சேராமல் பலருக்கும் பங்கிடப்படுகிறது. கூட்டுறவாளர்கள் நேர்மையும், நம்பிக்கையும் மிக்கவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் கூட்டுறவினல் பலன் கிடைக்கும்."

இவ்வாறு வடபகுதி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. மு. மதிபாலசிங்கம் வதிரி கூட்டுறவுச் சப்பாத்து உற்பத்திச் சங்கத்தின் ஏழாவதுஆண்டு நிறைவுவிழாவில் பேசுகையில் கூறினர்.

திரு. சி. பொ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கூட்டுறவுக் காரியாலயப் பரிசோதகர் திரு. தி. சண்முகராசா உட்படப் பலர் பேசினர்.

## புதுவருட நிர்வாகிகள்

உடுப்பிட்டி, சனி

வதிரி இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் நடப்புவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் கே. ஆறுமுகம் தலைவர் கே. குமரேசன், உபதலைவர் சி கிருஷ்ணபிள்ளை, செயலாளர் எஸ். தர்மரத்தினம், பொருளாளர் கே. அம்பலவாணர். ஐவர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

* * *

பளை, வெள்ளி

தம்பகாமம், வண்ணாங்கேணி, இத்தாவில் ஆகிய கிராமங்களில் பயிர்செய்கை குழுவிற்கான உத்தியோகத்தர் தெரிவு கமத்தொழில் ஆணையாளரின் தலைமையில் நடைபெற்றது. பளை கி. மு. சங்க மண்டபத்தில் நடைபெற்ற இத்தெரிவில் தலைவராக திரு ச. சின்னத்துரையும், தனதிகாரியாக திரு. சிவக்கொழுந்தும், காரியதரிசியாக திரு. செ. மார்க்கண்டும் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.


கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் — மனேரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
○ பெனியன்
○ ஸ்போட் சேட
○ ரி சேட
● ரெறி சேட்
● ரெமி பிளவுஸ்
பேபி வெஸ்ட்
● கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
32A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## கேள்வி விண்ணப்பம்

சமாச இரண்டு லொறிகளுக்கு 'பொடி பெயிண்ட்' செய்துகொள்வதற்குக் கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கவிரும்புவோர்சமாசத்தில் லொறிகளைப் பார்வையிட்டு. வேலை விபரங்களுடன் 21-5-66ம்திகதிக்கு முன்பு பதிவுத்தபாலில்,

தலைவர், வலி. மேற்கு ப. நோ. கூ. ச. சமாசம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும் 192

## பழம் லொறி ரயர்கள் விற்பனை விளம்பரம்

சமாசத்தில் பாவிக்கக்கூடிய பழம் லொறி ரயர்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. வாங்க விரும்புவோர் நேரில்வந்து பார்வையிட்டு பெறுமதி குறித்து பதிவுத்தபால் மூலம்,

தலைவர், வலி. மேற்கு ப. நோ. கூ. ச. சமாசம், சங்கானை என்ற முகவரிக்கு 21-5-66ம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும். 193

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

நல்லையாநித்தியானந்தன், துன்னாலை வடக்கு

வழக்காளி

எதிராக

இல. 8950

1 தணிகாசலம் கைம்பெண் செல்வரத்தினம்.
2 சின்னப்பா வேலும்மயிலும், பெண்
3 இலச்சுமி அம்மா
4 வேலுப்பிள்ளைசிவபாதம்.
5 காசிநாதர் கைம்பெண் நாகமுத்து
6 காசிநாதர் நமசிவாயம்

எதிரிகளுக்குக்

- வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று, துன்னாலைவிரசுந்தரமுதலி குறிச்சியிலிருக்கும் அபிவீர சேனாதிராயன் குடியிருப்பு நி. ப. 20 அம்பிகா சேனாதிராயர் குடியிருப்பு நில. பர. 4 இதில் இரு பகுதியிலும் தெற்குப்புறமாக நில. பர. 5 கழித்து ஆட்சியின்படி நில. பர. 19, நில. பர. 1 ரோட்டுக்கு நீக்கி மிகுதி நில. பர. 18, எல்லை கிழக்கு ஒழுங்கை, ப்ளான் P P 5849 விபரிக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் அரசாங்கநிலம் 7,8,9,10 துண்டுகளில் விபரிக்கப்பட்டும், வடக்கு ஒழுங்கையும் மறுபேருடைய ஆதனமும், மேற்கு N. கந்தையாவும் மறுபேருடைய ஆதனமும், தெற்கு தணிகாசலம் கைம்பெண் செல்வரத்தினத்தின் ஆதனம் என்னும் ஆதனங்கள்—1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமைய மேற்படிகோட்டில் மேற்படி இலகத்தின் ஓர் பிரிவடுதல் வழக்குத்தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது

மேற்படி வழக்கில் எதிரிகளும் இன்னும் உரிமைஉள்ளவர்களும் மேற்படி கோட்டில் 1966-ம் வருடம் சித்திரை மாதம் 30-ந் திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி

மு. ஸ்ரீபத்மநாதன்

சக்கிடுத்தாருக்காக

1966-ம் வருடம் சித்திரைமாதம் 28-ந் திகதி. 194

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## விளம்பரம்

ஞானிமடம் - கறுக்காய்த்தீவு ரோட்டுவேலைக்கு பதிவு செய்த கொந்தராத்துக்காரரிடம் இருந்தே கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கள்விப்பத்திரப் பணமாக ரூபா 10/- கட்டியதன் பேரில் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரத்திலேயே கேள்விகள் தயாரிக்கப்படல்வேண்டும். கேள்விப்பத்திரங்களை 16-5-66ந் திகதி நண்பகல் 12 மணிவரை கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 18-5-66ந் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் அக்கிராசனர், கிராமசபை, பூநகரி என்னும் விலாசத்திற்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல்வேண்டும். அதேநேரத்தில் அதன் பிரதியொன்று உதவி உள்ளூராட்சி அதிபருக்கும் அனுப்புதல்வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல் மூலையி வேலையின் பெயர் எழுதப்படல்வேண்டும்.

வேலையின் விபரங்கள் யாவும் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

த. செல்லத்துரை
அக்கிராசனர், கிராமசபை
196 பூநகரி

## கேள்விப் பத்திரம்

வடமராட்சிக் கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டட மாலைகளுக்கான கேள்விப்பத்திரம் அழைக்கப்படுகிறது. மரம் முதலிய மூலப்பொருள்கள் சங்கம் தரும். 20-5-66 க்கு முன் ரூபா 2/- கட்டி என்னிடமிருந்து பெறும் கேள்விப்பத்திரத்திலேயேநிரப்பி 30-5-66க்கு முன் சே. கிருஷ்ணசிங்கம், ஆத்தியடி, பருத்தித்துறை என்றவிலாசத்துக்குஅனுப்பவேண்டும்.

காரியதரிசி
195

## ஏல விற்பனை

யாழ்ப்பாணம்காங்கேசன் துறை வீதி, 236 இலக்கக் கடையில் நகை அடைவு பிடிப்பவர் ப. க. பரமநாதன் அவர்களிடம் 31-5-63 தொடக்கம் 31-12-64 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 25-5-66 புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் மேற்படி அடைவு கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

197

## நேதாஜியை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யினர் எழுந்து நின்று மேலும் பல உபகேள்விகள் கேட்டனர். அரசாங்கத்தின் புதிய கொள்கை பற்றி விவாதிக்க அரை மணி நேரம் ஒதுக்கவேண்டும் என்று ஸ்ரீ வாஜபேயர் கோரினார்.

பல அங்கத்தவர்கள் எழுந்து நின்று விளக்கம் கேட்டபோது சபைத் தலைவர் டாக்டர் ஸாகிர் ஹுஸேன் இக்கேள்விபற்றிய விவாதத்தை முடித்து அடுத்த கேள்விக்குப் போகலாம் என்றார். அங்கத்தவர்கள் உபகேள்விகள் கேட்க முயன்றனர்.

இவ்விஷயம் பற்றி விவாதம் நடத்தவேண்டும் என்ற கோரிக்கை பற்றித் தாம் ஆலோசிப்பதாக ச[illegible] தலைவர் கூறினார்.

## சைக்கிளோட்ட போட்டிமுடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 17-வது வருடாந்த விழாவை முன்னிட்டு திரு. சு. முத்துராசாவின் ஆதரவில் நடைபெற்ற 15 மைல் சைக்கிளோட்டப் போட்டியில் கொட்டடி இளைஞர் கழகத்தைச் சேர்ந்த ஏ. எஸ். எம். றபீக் முதலாவது இடத்தையும்; எஸ். சிவஞானரத்தினம் 2-ம் இடத்தையும்; மானிப்பாயைச் சேர்ந்த பி. சுப்பையா 3-ம் இடத்தையும்; உரும்பராயைச் சேர்ந்த எஸ். பாலச்சந்திரன் 4-ம் இடத்தையும்; கோப்பாயைச்சேர்ந்த பி. சுப்பிரமணியம் 5-ம் இடத்தையும் பெற்றனர்.

உள்ளூர்ப் போட்டியில் எஸ். சிவரத்தினம் 1-ம் இடத்தையும் எஸ். நவரத்தினராசா 2-ம் இடத்தையும், மா. நடராசா 3-ம் இடத்தையும் பெற்றனர்.

## 'கலைமணி' வென்றது

யாழ்ப்பாணம், சனி

சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் லகப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கோப்பாய் 'கலைமணி' விளையாட்டுக்கழகமும், சாவகச்சேரி மத்திய விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்ட ஒரு போட்டியில் முதல் ஆட்டத்தில் கலைமணிக் கோஷ்டி அபாரமாகப் போட்டியிட்டு 15/14 புள்ளிகள் பெற்று வெற்றிபெற்றது. 2-வது ஆட்டத்திலும் இக்கோஷ்டி விட்டுக்கொடுக்காமல் போட்டியிட்டு 14/9 புள்ளிகளால் வெற்றிபெற்றது. இரு ஆட்டங்களிலும் தொடர்ந்து வெற்றியீட்டி கலைமணிக்கோஷ்டி சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்தது. சாவகச்சேரி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு அரியாலை கே. எஸ். மயில்வாகனம் மத்தியஸ்தம் வகித்தார்.

## விற்பனைக்கு

பனங்கள்ளு

தினசரி 75கலன் சுத்தமான பனங்கள்ளு கொடுப்பதற்கு ரெண்டர் கோரப்படுகின்றது. பெர்மிட் எடுத்துக்கொடுக்கப்படும். 14-5-66க்குள் விண்ணப்பிக்கவும். குடாநாட்டு கைத்தொழில் கம்பனி லிமிட்டெட், மந்திகை, பருத்தித்துறை. 305

'ஈழநாடு' வெள்ளிக்கிண்ணம்

## வல்வெட்டித்துறை கோஷ்டி வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், ஞாயிறு

''ஈழநாடு'' வெள்ளிக்கிண்ணத்துக்காக தெல்லிப்பழை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் கரபந்தாட்டப் போட்டிகளில் சில முடிவுகள் வருமாறு:-

வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகம் மூன்று போட்டிகளில் வெற்றி பெற்றுச் சாம்பியனாகியுள்ளது.

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்துடன் நடைபெற்ற போட்டியில், இக்கழகம் கலந்துகொள்ளாததால் வல்வெட்டித்துறை கோஷ்டியினர் சுலபமாக (விளையாடாமலே) வெற்றியீட்டினர் இரண்டாவது போட்டியில் 'ஷைனிங் ஸ்டார்' கழகத்தை வல்வெட்டித்துறை வெற்றியீட்டியது. இப்போட்டி சிறிது விறுவிறுப்பாகவிருந்தது குறிப்பிடத்தக்கது. இ[illegible] [illegible] துறை விளையாட்டுக்கழகத்தைச்சேர்ந்த குகதாசனின் விளையாட்டுப் பாராட்டக்கூடியதாகவிருந்தது. 'ஷைனிங் ஸ்டாரை'ச் சேர்ந்த தேவமணி, கிருபராசா, தங்கவடிவேலு ஆகியோர் சிறப்பாக விளையாடினர். இதில் கிருபராஜாவின் விளையாட்டு மிகவும் விறுவிறுப்பாகவிருந்தது குறிப்பிடத்தக்கது. இப்போட்டிக்கு எம். பத்மநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

மூன்றாவது போட்டியில் திருக்கோணமலை ஸ்டார் விளையாட்டுக்கழகத்தை வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகம் சுலபமாக வெற்றியீட்டியது. ஸ்கோர்: 14—5 14 7. திருக்கோணமலை 'ஸ்டார்' விளையாட்டுக் கழகம் ஓரளவு திறமையாகவிருந்தாலும் இப்போட்டியில்தான் விளையாட்டுச் சோபிக்கவில்லை. இப்போட்டிக்கு திரு. கே. யதுகுல[illegible] மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கார்

நல்ல நிலைமையிலுள்ள ஆஸ்டின் கேம்பிரிட்ஜ் EN 9309 இலக்கக் கார் விற்பனைக்குண்டு. வவுனியா காரியாதிகாரியின் பங்களாவில் பார்வையிடலாம் 314

அம்பிளிபயர்...

ஒரு 'அம்பிளிபயர்', இரண்டு 'ஸ்பீக்கர்', ஒரு 'மைக்' (ஸ்டான்டுடன்) விற்பனைக்குண்டு. பொ. நாராயணசாமி, 29, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம், போன்: 7174. 315

ஒலிபெருக்கி

கிறம்பியன், வாட்டெடகஸ்சன் ஒலிபெருக்கி செற் விற்பனைக்குண்டு. பவானி சவுண்ட் சேவிஸ், கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி. 320

காணி

யாழ்ப்பாண நகரசபை எல்லைக்குள் சிறந்த அயலில் ஏழு பரப்புக் காணி விற்பனைக்கு இருக்கிறது. முழுவதும் முப்பத்தையாயிரம் அரைவாசியும் வாங்கலாம். செல்லத்துரை, 271, நாவலர் வீதி, (ஆனைப்பந்தி) யாழ்ப்பாணம். 307

வவுனியா நகரசபை எல்லைக்குள் வேப்பங்குளத்தில் (பிரதான வீதி) 5 ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு. 30 அடி அகலமுள்ள கிணறு அடங்கிய இக்காணியில், 75 தென்னை மரங்களும், 30 மா மரங்களும் வேறு பிரயோசனங்களும் உண்டு. வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்த இடம். எஸ். சந்திரசேகரம், தபாற் கந்தோர், வவுனியா. 291

வேலணை மேற்கு நாலாவரையில் இருக்கும் 35 பரப்பில் பனைகளும், வேப்ப மரங்களும்அத்துடன் 12 1/2 பரப்பு நெல்வயலும் விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் நேரில் எம். கந்தசாமி அவர்களை காம்வீதி, ஊர்காவற்றுறையில் சந்திக்கவும். 304

வெண்காயக்கூடுகள்

நல்ல தரமிக்க ஏழுகண் வெண்காயக் கூடுகள் எம்மிடம் உண்டு. தேவைப்படும் ஸ்தாபனங்கள் தொடர்புகொள்ளவும். நெடுந்தீவுப் பொருளாதார 'விநியோகஸ்தர்' நெடுந்தீவு. 311

## தேவை

பொலிஷ் பண்ணுபவர்

தளபாடஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள பொலிஷ் மன் (Polsih-men) தேவை. 25 வயதிற்குள் உட்பட்டவராக இருத்தல் வேண்டும். நேரில் வரவும். பாஷன் பேணிஷிங் பலெஸ், 5, 7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 316

நெசவுத் தொழிலுக்கு பெண்கள்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள பட்டுநூல் தொழிற்சாலைக்கு நெசவுத் தொழிலில் அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. இரண்டு வருடத்திற்கு அதிகமான அனுபவம் பெற்றவர்களே கீழ்க்கண்ட விலாசத்திற்கு 20-5-66க்கு முன் விண்ணப்பிக்கவும். அதிபர் சாறி எம்போறியம். காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 319

நல்ல முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மலர் நெசவு நிலையத்திற்கு நன்கு நெசவு பயின்ற பெண்கள் தேவை. நேரில் வரவும். மனேஜர், மைலன்வில் மேல் மாடி, 119, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம், 318

குமாஸ்தாவும், காசாளரும்

ஒரு குமாஸ்தாவும், ஒரு காசாளரும் தேவை. பிணைப் பணம் முறையே ரூபா 1000/-, 1500/- கட்டக்கூடியவர்கள் விண்ணப்பிக்கவும். குடாநாட்டு கைத்தொழில் கம்பனி லிமிட்டெட், மந்திகை, பருத்தித்துறை. 306

## கல்வி

பிரவேசபாலபண்டித வகுப்புக்கள்

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் சென்ற வருடம் போல இவ்வாண்டும் ஷ வகுப்புக்கள் ஆனியில் ஆரம்பமாகும். 1-6-66 க்கு முன் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். பொன். கந்தசாமி மாதகல். 310

வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்க ஆதரவில் பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலையில் 11-5-66 புதன்கிழமை பி. ப. 2 மணிக்கு ஷ வகுப்புகள் தொடக்கப்பட்டு, ஒவ்வொரு போயாதினத்திலும் அதற்கு முன் தினத்திலும் ஏனைய விடுமுறைநாட்களிலும் நடைபெறும். இவற்றிற் சேர்ந்து கற்கவிரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும். பண்டிதர் அ. ஆறுமுகம், பண்ணாகம், சுழிபுரம். 317

## வாடகைக்கு

புல்டோசர்

எமது கற்றபில்லர் புல்டோசர் கண்டாவளைப் பகுதியில் வேலை ஆரம்பித்துவிட்டது தேவைகளுக்கு நேரில் சந்திக்கவும். டோசர் யூனிற், வெலிக்கண்டல், கண்டாவளை. 313

வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சப்-இன்ஸ்பெக்டர் 'வாரண்ட்' உத்தரவு

மல்லாகம், சனி

மல்லாகம் நீதிபதி திரு. ஜி. வி. பாலசிங்கம்முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஓர் திருட்டுவழக்கில் முக்கிய சாட்சியான பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கோர்ட்டிற்கு சமுகமளிக்காமையால் நீதிபதி அவருக்கு "வாரண்ட்" உத்தரவுபிறப்பித்தார்.

இவ்வழக்கில் காங்கேசன் துறையைச் சேர்ந்தவர்களான சுப்பிரமணியம் இராசேந்திரம், சுப்பிரமணியம் குணரத்தினம் ஆகிய இருவரும் சென்றவருடம் டிசம்பர்மாதம் 7-ந் திகதி மாவிட்டபுரத்தைச்சேர்ந்தமயில்வாகனம் திருச்செல்வம்என்பவருக்குச் சொந்தமானதும் 220 ரூபாய் வெறுமதியுள்ளதுமான இரண்டுகட்டு யன்னல் கம்பிகளைத் திருடியதாக காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள்தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம்ஆஜராஞர். பொலிஸ்தரப்பில் பொலிஸ் சார்சண்ட் திரு. சின்னையாவின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. ஏ. குமரகுரு ஆஜராஞர்.

வழக்கு நீதிபதி முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது இவ்வழக்கில் முக்கிய சாட்சியும் சம்பவ சமயம் காங்கேசன்துறை பொலிஸ் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியாகவிருந்தவரும் தற்போது வவனியா பொலிஸ் சட்டவிரோத குடியேற்றத் தடுப்புப் பகுதிக்கு பொறுப்பதிகாரியாகவுள்ளவருமான சப் இன்ஸ்பெக்டர் திரு. ஜோகரன் கோர்ட்டிற்கு வரவில்லையென நீதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் செல்வரத்தினம் நீதிபதியிடம் சப் இன்ஸ்பெக்டரை இந்தத் தவணையில் கோர்டில் ஆஜராகும்படி நீதிமன்றத்தால் எச்சரிககப்பட்டிருந்தும் அவர் கோர்ட்டிற்கு வராமையால் அவருக்கெதிராகவாரண்ட்உத்தரவுப்றபிபிக்க வேண்டுமென விண்ணப்பித்தார். இதனை ஏற்ற நீதிபதி சப் இன்ஸ்பெக்டர் திரு. யோகரனைக் கைது செய்ய வாரண்ட் உத்தரவு பிறப்பித்து வழக்கை அடுத்த மாதம் 26-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## டயமன்ஸ் வெற்றி

உடுப்பிட்டி, சனி

வதிரி டயமன்ஸ் கோஷ்டிக்கும் ஒடை கலைமகள்கோஷ்டிக்குமிடையே ஒடைகலைமகள் மைதானத்தில் நடைபெற்றகிரிக்கட் போட்டியில் வதிரி டயமன்ஸ் கோஷ்டியினர் 5 விக்கெட்டுகளாலும், 10 ஓட்டங்களாலும் வெற்றியீட்டினர்.

## பண்டத்தரிப்பு அர்ச். பத்திமாகோவில் திரிதின ஆராதனை

பண்டத்தரிப்பு, அர்ச். பத்திமா கோவிலில் வழமை போல, திரிதின ஆராதனைகள் இம்மாதம் 10,11,12ல் பிற்பகல் 5-30க்கு நடைபெறும். ஆனல் 12-ந்தேதி பிற்பகல் 7 மணிக்குத்திருமணித்தியாலம் ஆரம்பித்து 8 மணிக்குத் திவ்விய பூசை இருக்கும். அடுத்த நாளாகிய திருநாளன்று காலை 7 மணிக்குத்திவ்விய பாடற் பூசை ஒப்புக்கொள்ளப்படும். 198

மல்லாகத்தில்

# ரூ. 6000 கடத்தல் துணிகள் பொலிஸார் கைப்பற்றினர்

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறைப் பொலிசாருக்குக் கிடைத்த ஓர் இரகசியத் தகவலைத் தொடர்ந்து காங்கேசன் துறை உதவிப் பொலிஸ் சுப்ரிண்டன் திரு. வால்டர் லியனகே காங்கேசன்துறை பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். மூர்த்தி ஆகியோர் தலைமையில் சென்ற ஒரு பொலிஸ் கோஷ்டி மல்லாகம் கோர்ட்டடி ஒழுங்கையில் உள்ளஒருவீட்டைநேற்றிரவு திடீரென சோதனையிட்டுச் சுமார் 6000 ரூபாய் பெறுமதியுள்ளதும் இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சட்டவிரோதமாகக் கடத்திக் கொண்டுவரப்பட்டதாக கருவப்படுததுமான 240 சங்குமார்க் பளயகார்ட் சாரங்களைக் கைப்பற்றினர்கள்.

இந்த 240 சாரங்களிலும் 'சங்குமார்க்மெட்ரூஸ் பளயகார்ட் கம்பனி'' என அடையாளமிடப் பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இச்சாரங்கள் தற்போது இலங்கையில் இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் விசாரணையில் இச்சாரங்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. இதுசம்பந்தமாக மல்லாகம் கோர்ட்டடி ஒழுங்கையைச் சேர்ந்த பாலிலுதிரவியநாயகம் என்பவரைப் பொலிசார் கைதுசெய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளார்கள் சாரங்கள் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. பொலிசார் தொடர்ந்து புலன்விசாரணைசெய்கிருர்கள்.

## செய்திச்சுருக்கம்

வீடில்லாப் பிரச்னையை கூடிய விரைவில் தீர்ப்பதற்காக தேசிய வீடமைப்பு இலாகா இன்று மூன்று வருட திட்டமொன்றை தயாரித்துள்ளது. இத்திட்டத்தை உடனடியாக அமுல் நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளை வீடமைப்பு இலாகா செய்துவருகின்றது. இவ்வருடம் இலாகா 12,000 வீடுகளைக் கட்டுவதற்கான ஒழுங்குகளை செய்யும் எனத் தெரிகிறது.

''முஸ்லிம் பாடசாலைகளில் உள்ள மௌலவி ஆசிரியர்களுக்கான காலி இடங்கள் உடன் நிரப்பப்பட வேண்டும்'' என்ற தீர்மானம் கொழும்பு ஸாகிராக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அரபு பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பதினெட்டாவது ஆண்டுவிழாக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

ஃ ஃ ஃ

ஆங்கிலத்தைப் பொதுச் சோதனைகளுக்கு இரண்டாவது கட்டாய பாடமாக்குவது பற்றி கல்வி இலாகா கல்லூரி அதிபர்களிடம் அபிப்பிராயம் கேட்க இருக்கின்றது. ஆங்கிலக் கல்லூரிகளில் ஆங்கிலத்தின் தரம் மோசமடைந்து கொண்டு போவதைத் தடுக்கும் நோக்குடன் ஆங்கிலத்தை மீண்டும் பாடசாலைகளில் ஒரு கட்டாய பாடமாக்குவது பற்றி ஆலோசிக்கப்படுகின்றது.

ஃ ஃ ஃ

''மலைநாட்டு மக்களுக்காக உண்மையாக உழைத்து வாழ்ந்து மறைந்த தலைவர் இராஜலிங்கத்துக்கு எனது மனமார்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறேன்'' என்று 'இலட்சிய நடிகர்' எஸ் எஸ். ராஜேந்திரன் கூறினர். சங்குவாரித் தோட்டத்திலுள்ள மறைந்த மலையகத் தலைவர் இராஜலிங்கத்தின் சமாதிக்கு நடிகர் எஸ். எஸ். ஆர். மலர் வலையம் வைத்து அஞ்சலி செலுத்தியபோதே மேற்கண்டவாறு கூறினர்.

## சாம்ராஜ்ய குற்றவாளிகள்

லண்டன், மே 7

சாம்ராஜ்யத்தினுள்ளே தப்பி ஒளிந்திருக்கும் குற்றவாளிகளை மீட்டு ஒப்படைப்பதற்கு மேண்டிய விதிகளை நிர்ணயிக்கும் ஒரு திட்டம் இப்பொழுது லண்டனில் உருவாக்கப்பட்டிருக்கிறது. சாம்ராஜ்ய சட்ட அமைச்சர்கள் லண்டனில் ஒரு கிழமையாகக் கூடி நடத்திய பேச்சுவார்த்தைகளின் பலன் இதுவே.

சட்டங்கள் அமைப்பதற்கு வேண்டிய மூலாதாரத்தை இவ்விதிகள் அளிக்கின்றன. எனவே, ஒவ்வொரு சாம்ராஜ்ய நாடும், இத்திட்டத்திற்கு முழு ஆதரவு கொடுக்கவேண்டும் என அமைச்சர்கள் கேட்டுக் கொண்டனர். இது ரோடீஷியாவுக்கு மட்டும் பொருந்தாது.

சாம்ராஜ்ய அரசாங்கங்களுக்கிடையே, இயங்கவென சட்ட உறவுக்காரியாலயப் பிரிவொன்று சாம்ராஜ்ய செக்ரட்டேரியட்டுடன் இணைக்கப்படவேண்டும் என தத்தம் பிரதம மந்திரிகளிடம் பிரேரிக்கவும்இவர்கள் இணங்கியுள்ளனர்.

## ஸ்காட்டின் குற்றச்சாட்டு

லண்டன், மே 7

'இந்திய அரசாங்கம் எனது அந்தரங்க தஸ்தாவேஜுகளையும், ஒலிப்பதிவுகளையும் பறிமுதல் செய்துவிட்டது'' என பாரதத்திலிருந்து வெளியேற்றப்பட்டு லண்டன் வந்து சேர்ந்த முன்னள் நாகா அமைதிக் குழுத் அங்கத்தினர் மைக்கேல் ஸ்காட்டு இங்கு கூறினர்.

இந்திய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை பற்றி பரிசிலிக்குமாறு தாம் காமன்வெல்த் உறவுக் காரியாலயத்தைக் கேட்கப்போவதாகவும் அவர் கூறினர்.

அஸ்ஸாமிலுள்ள ஷில்லாங்கிலிருந்து 30 மைல் தூரத்தில் நான் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டபோது இச்சம்பவங்கள் நடைபெற்றன என்ருர் ஸ்காட்.

## விளையாட்டுக்கழக கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பஷையூர் அர்ச் அந்தோனியார் விளையாட்டுக் கழக கூட்டம் கழக புது மனையில் தலைவர் வண. பிதா ஜே. பி. சந்தியாபிள்ளை தலைமையில் நடைபெற்றபோது கழகத்தினர் இலங்கை சுற்றுப்பயணம் ஒன்றை விரைவில் மேற்கொள்வதெனவும் உள்ளூர் உதைபந்தாட்ட லீக் சுற்றுப் போட்டியொன்றை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட்டக்கச்சியிலுள்ள கந்தவனம் கணபதிப்பிள்ளைக்கு சொந்தமான புதிய கடையொன்றுக்கு சேதம்விளைவித்ததாக வட்டக்கச்சியைச் சேர்ந்த கதிரவேலு பொன்னம்பலம், கதிரவேலு சுப்பிரமணியம், பசுபதி நாகலிங்கம் ஆகிய மூவர்மீதும் கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று கிளிநொச்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் எடுத்துக்கொள்ளப் பட்டபோது விசாரணையின் பின் மாஜிஸ்டிரேட் திரு. றேபேர்ட்சில்வா எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

எதிரிகள் சார்பில் புரக்டர் ஏ. அன்ரனி ஆஜராஞர்.

(ந. நி.)

## பட்டினசபை கலைக்கப்பட்டது

கொழும்பு, சனி

திஸமாரா பட்டின சபையை மந்திரி திருச்செல்வம் கலைத்துவிட்டார் விசேஷ ஆணையாளர் அதன் பொறுப்பை இப்போதுமேற் கொண்டிருக்கிருர்,

## பத்ரிநாத்துக்கு புதிய பாதை

புதுடில்லி, மே 7

ஹரித்துவாரிலிருந்து 10,000 அடி உயரமான பத்ரிநாத் ஆலயத்துக்கு புதிய பாதையொன்றை பாதுகாப்புமந்திரி திரு. சவான் நேற்று திறந்து வைத்தார். வழக்கமாக 15 நாள் பிடிக்கும் இந்தப் பிரயாணத்தை இப்போது மோட்டார் வாகனங்கள் மூலம் இரு தினங்களில் அடையலாம்.

## சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு

மண்டைதீவில் வீடொன்றுக்குத் தீ வைத்தது சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்த நடராசா என்பவரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் இக்னேசியஸ் சென்ற செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்துள்ளார். சந்தேகநபர் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார், (ந. நி.)

## புதிய சந்தை திறப்புவிழா

கோண்டாவில், சனி

''உள்ளூராட்சி மன்றங்களை வளர்ப்பது பொதுமக்களின் கடமையாகும். இன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேசி அரசாங்கம் விசேஷ அதிகாரங்கள் வழங்கியுள்ளது. இந்த அதிகாரங்கள் பொதுமக்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்கள் என்றே கூறவேண்டும். அளவெட்டி தெற்கில் மல்லாகம் கிராமசபைக்குச் சொந்தமான சந்தையை மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வை. இராசதுங்கம் திறந்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் மத்தியஅரசாங்கம் அளிக்கும் சிறிய நன்கொடைப் பணத்துடன் பொதுமக்களும் சிரமதான மூலம் தமது கிராமத்திற்கு வேண்டிய தேவைகளை பூர்த்திசெய்யவேண்டுமென்றும் இப்பணியில் கிராமங்களிலுள்ள சனசமூகநிலையங்கள், இளைஞர்கழகங்கள் கிராமமுன்னேற்றச் சங்கங்கள் ஆகியன முன்னின்று உழைக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

## இறுதிக்கால...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் சென்றுகொண்டிருந்தது.

இருந்தும் அவர்ஒரு மனம் நிறைந்த மகிழ்ச்சியாளராகக் காணப்பட்டார், அதேசமயம் கஷ்டங்களில் இருந்து தப்பிச்செல்லவும் அவர் விரும்பவில்லை என்ருர் ராதாகிருஷ்ணன்.

நேருவின் படத்தை வரைந்த ஐரோப்பிய சித்திரக்காரர் திரு. ரோரிச் நேரு பற்றிக் குறிப்பிட்ட போது, ''பண்டிட்ஜீ ஒரு அசாதாரண மனிதராக எனக்குத் தென்பட்டார். அரசியல் தலைவராக மட்டுமன்றி, ஒரு மனிதப் பண்பு கொண்டவராக அவர் காணப்பட்டார்'' என்ருர்.

''அவர் அற்புதமான இதயத்தைப் படைத்திருந்தார். தனது சொந்தவழியில் அவர் இவ் விஷயத்தில் பெரிய கலைஞர். இயற்கையை அவர் நேசித்தார். ஆனல் எல்லாவற்றையும்விட மனிதனை அதிகம் நேசித்தார். அவரது இந்த மனிதர்கள் மீதான கருணையையும், அவரது ஆத்மீக பலத்தையும்தான் எனது படத்தில் காட்டமுயன்றிருக்கிறேன். பண்டிட்ஜீ தேசிய மூவர்ணக்கொடியின் ஒரு பகுதியாகவும். மூவர்ணக் கோடி பண்டிட்ஜீயின் ஒரு பகுதியாகவும் இருந்தினலேயே, அவரது படத்திற்கு இந்தக் கொடியை பின்னணியாக அமைத்தேன்'' என்ருர் ரோரிக்.

பி. டி. ஐ,

## சிங்களதோச்சி..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சிமிந்தித் தொழிற்சாலையில் நீண்ட காலமாகத் தற்காலிகமாக வேலைசெய்து வரும் தொழிலாளர்கள் இதுவரை நிரந்தரமாக்கப் படவில்லை. இதனல் தொழிலாளர்கள் பெரும் கஷ்டமனுபவிக்கிருர்கள். இதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவேண்டும்.

அதிகாலையில் காங்கேசன் துறையிலிருந்து கொழும்பு செல்லும் 'உத்தரதேவி'க்கு முன் செல்லும் புகைவண்டியை கடந்த அரசாங்கம் நிறுத்திவிட்டது. இப் புகையிரதசேவை இல்லாததனல் மாவிட்டபுரம், தெல்லிப்பழை, மல்லாகம் ஆகிய இடங்களிலுள்ள பிரயாணிகள் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். மீண்டும் இச்சேவை நடைபெற ஒழுங்குகள்செய்யவேண்டும். இல்லையேல் காலையிலும், இரவிலும் உத்தரதேவியை நிறுத்திச் செல்ல ஏற்பாடுசெய்ய வேண்டும்.

## எம். ஸி. ஸி. புதிய தலைவர்

லண்டன், மே 7

முன்னுள் பிரிட்டிஷ் பிரதமர் சர் அலெக்ஸ் டக்ளஸ் ஹியூம், எம். ஸி. ஸி. யின் புதிய தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார். முன்னர் லெப்பினன்ட் ஜெனரல் சர் ஒலிவர் லீஸ் இதன் தலைவராகவிருந்தார். (பி. டி. ஸி.)

## பாதுகாப்பிலிருந்து நழுவிய கைதி

கொழும்பு, வெள்ளி

கொழும்பு அரசினர் ஆஸ்பத்திரியில் சுகயீனம் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த எஸ். ஏ. ஜினதாசா என்ற கைதி ஆஸ்பத்திரியில் நின்றும் தப்பி ஓடிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் பகுதியினர் இக்கைதியைத் தேடுவதில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org